सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

**ஊடக அறிக்கை**

இந்திய அரசாங்கமானது வட மாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்கு என பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் 27 பாடசாலைகளுக்கு வகுப்பறைக் கட்டடங்களை அமைப்பதற்க்காக 250 மில்லியன் இலங்கை ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

2. அதன் ஓர் கட்டமாக இன்று கிளிநொச்சி செல்வா நகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் நாச்சிக்குடா அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலையிலும் ஒவ்வொன்றும் முறையே 8.5 மில்லியன் மற்றும் 7.5 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறை தொகுதிகள் யாழ் இந்திய துணைத் தூதுவர் திரு ச.பாலச்சந்திரன் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சர் கௌரவ கலாநிதி க. சர்வேஸ்வரன் அவர்களால் இணைந்து இன்று (03.யூலை 2018) திறந்து வைக்கப்பட்டது. விழாவில் உரையாற்றிய கல்வி அமைச்சர் மற்றும் ஏனைய பேச்சாளர்கள் இந்திய அரசாங்கத்தின் இவ் உதவிக்கு தமது நன்றிகளைத் தெரிவித்தனர். கல்வித்துறை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் நிகழ்வில் சமூகமளித்திருந்தனர். இந் நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

3. நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

***03 யூலை, 2018***
***யாழ்ப்பாணம்***

सत्यमेव जयते

# Consulate General of India
# Jaffna
# Press Release

The Government of India has been undertaking several projects for the development of educational facilities in the Northern Province. In continuation of these efforts, currently, the Government of India has provided assistance for constructing class room buildings in 27 schools in the Northern Province at a total cost of LKR 250 Million and those class room buildings which have been completed are being handed over to the schools in phases.

2. As part of this, today (03 July 2018) Consul General of India Mr.S.Balachandran jointly with Dr.K.Sarveswaran, Hon'ble Education Minister of Northern Province inaugurated the class room buildings in Kilinochchi / Selvanagar Government Tamil Mix School and Nachchikuda Government Muslim Mix School, built at a cost of about 8.5 million and 7.5 million each respectively. Education authorities, School Principals and staff members, students, parents and well-wishers attended the ceremony, which was marked by cultural programmes. The Hon'ble Education Minister and other speakers thanked India for its assistance.

3. Some photographs taken on the occasion are enclosed.

***

3 July 2018
Jaffna